காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் வடக்கு, தெற்கு ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைகளை வழங்கினார். அருகில் ஒன்றியக்குழு தலைவர் எல்.இதயவர்மன், திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், பேரூர் செயலாளர் மு.தேவராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு72ல் வ.உ.சி. நகரில் உள்ள சமூகநலக்கூடத்தில் நேற்று (30.07.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கான தீர்வுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் மு.சரவணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025 ஆம் ஆண்டு

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக பதிவுகள்!

சென்னை, ஜூலை 31-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் (Chief Minister's Trophy Games 2025) அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22.8.2025 முதல் 12.9.2025 வரை நடத்தப்படவுள்ளன.

இவ்விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 12 வயது முதல் 19 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கும், 17 வயது முதல் 25 வயதிற்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கும், 15 வயது முதல் 35 வரையிலான பொதுப் பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும், அரசு ஊழியர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

தனி நபர் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 1.00 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். குழுப் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக தலா 50 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக தலா 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் சிறப்பு மதிப்பெண்கள் மற்றும் சலுகைகள் பெற இயலும்.

37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக பதிவுகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in / https://sdat.tn.gov.in வாயிலாக தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள 17.7.2025 முதல் முன்பதிவு நடைபெற்று வருகிறது. முன்பதிவு செய்திட கடைசி நாள் 16.8.2025 மாலை 6.00 மணி ஆகும்.

விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்துகொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம். ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 95140 00777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

'ஓரணியில் தமிழ்நாடு' பணிகள் குறித்து –

சென்னை தெற்கு மாவட்ட BLA2 - BDA க்களுடன் காணொலி வாயிலாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று கலந்துரையாடுகிறார்!

சென்னை, ஜூலை 31 -

சென்னை தெற்கில் 'ஓரணியில் தமிழ்நாடு' பணிகள் குறித்து காணொலி வாயிலாக இன்று (31.7.2025 வியாழக் கிழமை) மாலை 6 மணி அளவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட 11 பகுதிக் கழகங்கள், 2 ஒன்றியக் கழகங்களை சார்ந்த BLA2 மற்றும் BDAக்கள் சற்றொப்ப 4000 பேருடன் கலந்துரையாடுகிறார்.

எனவே இந்த காணொலி வாயிலாக நடைபெறும் கலந்துரையாடல் கூட்டத்தில் அந்தந்த பகுதி,ஒன்றியக் கழகங்களுக்குட்பட்ட பகுதி கழக செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் குறித்த நேரத்தில் பங்கேற்றிடுமாறு சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கோவில்பட்டியில் – ரூ.7.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

கடலைமிட்டாய் உற்பத்தி குறுங்குழும வசதி மையம்!

அமைச்சர் பி.கீதாஜீவன் அடிக்கல் நாட்டினார்!

கோவில்பட்டி, ஜூலை 31-

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், மூப்பன்பட்டி ஊராட்சியில் நேற்று (30.07.2025) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பாக குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7.12 கோடி மதிப்பீட்டில் நவீன இயந்திரங்களுடன் கூடிய கடலைமிட்டாய் உற்பத்தி குறுங்குழும பொது வசதி மையம் கட்டுவதற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தெரிவித்ததாவது :

புவிசார் குறியீடு பெற்று தரத்திலும், சுவையிலும் உலகப் புகழ்பெற்ற கோவில்பட்டி கடலைமிட்டாய் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதலையும், வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளுக்கேற்ப அவர்களது உற்பத்தி திறனை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு 'கோவில்பட்டி பகுதியில் கடலைமிட்டாய் உற்பத்தி குறுங்குழுமம் அமைக்கப்படும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து நவீன இயந்திரங்களுடன் கூடிய மூலப்பொருட்களைத் தரம் பிரிக்கும் கூடம், கடலைமிட்டாய் உற்பத்தி மற்றும் பேக்கேஜிங் கூடம், உணவுப்பொருட்கள் பகுப்பாய்வுக் கூடம், ஆகியவற்றை அமைப்பதற்காக குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்ட தொழில் மையம் மூலம் ரூ.713.22 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

மொத்த திட்ட மதிப்பீட்டில் 90% தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு மீதமுள்ள 10% கடலைமிட்டாய் உற்பத்தியாளர்கள் சங்கத்தால் முதலீடு செய்யப்பட்டது. இந்த பொது வசதி மையம் அமைவதால் கோவில்பட்டி கடலைமிட்டாய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுமார் 100 குறு மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் பயன்பெறுவர். 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பும், ஆண்டிற்கு 60 கோடி வருவாயும் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோவில்பட்டி கடலைமிட்டாயின் நேரடி ஏற்றுமதி வருவாயும் தற்போதைய அளவிலிருந்து 5 மடங்கு அதிகரிக்கும் என சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், கோவில்பட்டி நகரமன்றத் தலைவர் கருணாநிதி, தூத்துக்குடி மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திருமதி.அ.ஸ்வர்ணலதா, தொழில் நிறுவன உரிமையாளர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, ஜூலை 31-

தமிழ்நாடு முழுவதும் தடையில்லா மற்றும் சீரான மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், தலைமையில் நேற்று (30.7.2025) மின்சார வாரியத் தலைமை அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இயக்குநர் / பகிர்மானம், மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் கலந்துகொண்டனர். மாநிலத்தின் மின் விநியோக நிலை, வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் புதிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, கள அலுவலர்களுக்குப் பின்வரும் முக்கிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன: வரவிருக்கும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில்,பழுதடைந்த மின்கம்பங்கள், தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகள் மற்றும் மின்பாதைகளை உடனடியாகச் சீரமைத்து, பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.இயற்கை இடர்பாடுகளின் போதுஏற்படும்மின்தடைகளை உடனடியாகச் சரிசெய்யத் தேவையான உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் பணியாளர்களை அனைத்து மண்டலங்களிலும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வாரிய தலைவர் , வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்தவும், நுகர்வோர் திருப்தியை உறுதிப்படுத்தவும், தற்போதைய திட்டங்களை விரைவாக செயல்படுத்துதல் மற்றும் செயல்பாட்டில் உள்ள சவால்களைத் தீர்க்கும் பணிகளை விரைந்து முடித்தல் குறித்து முன்னுரிமையாக எடுத்துரைத்தார். முக்கியமாக நிலுவையில் உள்ள உயர் மற்றும் தாழ்வழுத்த மின் இணைப்பு விண்ணப்பங்களின் நிலை, முக்கிய தளவாட பொருட்கள் மற்றும் மனிதவளத்தின் தேவை, மாற்றியமைக்கப்பட்ட விநியோகத் துறை திட்டம் (RDSS) மூலம் செயல்படுத்தப்படும் ரூ.1500 கோடி மதிப்பீட்டில் 33/11 கிலோ வோல்ட் உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள், டர்ன்கீ முறையில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டங்கள், வருவாய் பெருக்கம் குறித்த செயல் திட்டங்கள், பீடரில் ஏற்படும் மின்தடை, மின்மாற்றிகளில் ஓவர்லோடு மற்றும் விபத்துத் தடுப்பு தொடர்பான சவால்கள், சென்னை மற்றும் டெல்டா மாவட்டங்களில் மேல்நிலை மின்கம்பிகளை புதைவட கேபிள்களா மாற்றும் பணிகளை விரைவுபடுத்துதல், மின்னகம் அழைப்புகள், சமூக ஊடக புகார்கள் மற்றும் பல்வேறு வகைகளில் பெறப்படும் பொதுமக்கள் மற்றும் நுகர்வோர்களின் குறைகளை தீர்க்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளல் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார்.

மேலும் பிரதம மந்திரி சூரிய ஒளி மின்சார திட்டத்தின் கீழ் மேல்மாடி சூரிய மின்சார இணைப்புகளுக்கு அனுமதிகள் விரைந்து வழங்குதல் மற்றும் இதுவரையில் சோலார் பேனல் நிறுவும் நிறுவனத்தை தேர்ந்தெடுக்காத மின் நுகர்வோர்களை நேரடியாக தொடர்புகொண்டு, தகுதியான நிறுவனத்தை தேர்ந்தெடுக்க ஆலோசனை வழங்குமாறு எள இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. காற்று மற்றும் சூரிய ஆற்றல் உற்பத்தியாளர்களிடமிருந்து பசுமை எரிசக்தி உற்பத்திக்கான மின்தேவை மேலாண்மை கட்டணங்களை காலத்திற்கேற்ப வசூலித்தல் மற்றும் சரிசெய்தல், டெண்டர் முறைகள் இறுதி செய்வது, நீதிமன்ற நிலுவை வழக்குகள் மற்றும் தீர்ப்புகளின் மீதான உடனடி சட்ட ஆலோசனை மற்றும் துரித நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் பிற துறைகளுடன் உள்கட்டமைப்பு அனுமதிக்கான ஒருங்கிணைப்பு அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

தற்போது 12 மண்டலங்களில், 133 புதிய துணை மின் நிலையங்களுக்கும், ஏற்கனவே உள்ள துணை மின் நிலையங்களில் 52 புதிய மற்றும் கூடுதல் உயரழுத்த மின் மாற்றிகளை நிறுவும் பணிகளை உடனடியாக துவக்க முடிவெடுக்கப்பட்டு வரும் 10.08.2025 க்குள் டெண்டர் கோரும் பணிகளை நிறைவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இறுதியாக, மாநில அளவில் விநியோகத் துறையின் செயல்திறன் மற்றும் பொறுப்புத் தன்மை அதிகரிக்கும் நோக்கில் அனைத்து அதிகாரிகளும் திட்டங்களை நேரத்தில் நிறைவேற்றவும், முன்நோக்கிய பார்வையின் அடிப்படையில் புகார் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், துறையினருடன் நேரடி கண்காணிப்பை தீவிரமாக்கவும், சேவை தரம் மற்றும் நுகர்வோர் திருப்தியை உயர்த்த நடவடிக்கை எடுக்கும்படி மீண்டும் வலியுறுத்தி உத்தரவிட்டார்.

'மின்னகம்' நுகர்வோர் சேவை மையம் மூலம் பெறப்படும் புகார்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அவற்றை உடனடியாகச் சரிசெய்து, பொதுமக்களுக்குத் திருப்திகரமான சேவையை வழங்க வேண்டும். மேலும், திட்டமிடப்பட்ட பராமரிப்புப் பணிகள் காரணமாக ஏற்படும் மின்தடை குறித்த விவரங்களை நுகர்வோருக்கு முன்கூட்டியே குறுஞ்செய்தி (SMS) வாயிலாகத் தெரிவிப்பதை அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்களும் உறுதிசெய்யவேண்டும். மின் சேவைகள் மற்றும் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இக்கூட்டத்தில், பசுமை எரிசக்திக் கழக மேலாண்மை இயக்குநர் மரு. அனீஸ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர் (பகிர்மானம்) ஆ.ரா. மாஸ்கர்னஸ், இயக்குநர் பகிர்மானம் (நிதி) கே. மலர்விழி, பசுமை எரிசக்திக் கழக இயக்குநர் (தொழில்நுட்பம்) எஸ். மங்களநாதன், வாரிய செயலர் ஆர். தேவராஜ், அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் மின் வாரிய தலைமையக உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட முடிச்சூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பி.தாமோதரன் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். உடன் ஒன்றிய செயலாளர் ஜி.கே.விவேகானந்தன், ஊராட்சி துணைத் தலைவர் விநாயகம், திமுக நிர்வாகிகள் சுகுமார், புனிதா ராஜா, சுனில் மேத்யூ, குமார், லோகநாதன், வெங்கட்ராமன், சுஜாதா, மேகநாதன் உட்பட பலர் இருந்தனர்.

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மேற்கு சட்டமன்ற தொகுதி பழங்காநத்தம் பகுதி 62வது வட்டத்திற்குட்பட்ட பகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர் எஸ்.வி.சுதன், வட்டச் செயலாளர் வேல்முருகன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, விவசாய அணி துணை அமைப்பாளர் கணேசன், கழக நிர்வாகிகள் ராஜேஷ், நாகநாதன், முகமது ரபிக், மரக்கடை சரவணன், ஆனந்த் பாபு, மதி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பயனாளிகள் பங்கேற்றனர்